தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சார்வரி, மாசி 15, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 பிப்ரவரி 27, சனிக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்."

செய்வதற்கு முடியாத கடினமான செயல்களையும், செய்யும் முறை அறிந்து, திறம்படச் செய்து முடிக்கின்ற திறமை உள்ளவரே பெருமை உடையவர் ஆவார்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். பேரவை விதிகளின்படி பேரவைக் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் நேரம். ஒருமனதாக முடிவு செய்தாலன்றி, முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் அளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும். எனவே, இன்றைக்கு வினாக்கள்–விடைகள் முதலில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. பொதுத் தேர்தல் நன்னடத்தை விதிகள் நேற்று மாலை முதல் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், வினாக்கள்–விடைகள் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதிலளிக்கும்போது, தேர்தல் நன்னடத்தை விதிகளைக் கருத்திலேகொண்டு, பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

41—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

***58658—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியில் புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணக்குக் கேட்டு பிறந்த கழகத்தை, உலகமே வியக்கும்வண்ணம் ஏழைகளின் சொர்க்கமாக்கிய இதயக் கனியே! ஓலைக் குடிசைக்கும் ஒரு விளக்கேற்றிய ஒளி விளக்கே! வருடங்கள் கழிந்தாலும், வளர்பிறை சந்திரனாய், நிலைத்த கோல்கொண்ட நிகரில்லா கொடைவள்ளலே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவருக்குப்பின் ஓடி உழைத்த தாய், ஓயாது, உறங்காது ஒப்பில்லா தமிழகம் உயர்வடைந்து சிறக்கவே தம் ஆயுளையே ஒப்படைத்த ஒப்பில்லா நம் தெய்வத் தாய்.

நம் புரட்சித் தலைவிக்குப்பின், ஒப்படைத்த நல்லாட்சியை, உலகமே வியக்கும் பொற்கால ஆட்சியாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலமாகத் தமிழகத்தை உயரிய மாடத்தில் அமர வைத்து, ஏழை, எளிய மக்களின் இதயங்களை வென்று, இந்திய தேசம் முன்னெடுத்த விருதுகளில் மூன்றில் ஒரு பங்கை கொத்தாகக் கொண்டுவந்து, இந்திய முதல்வர்களிலே எங்கள் எடப்பாடியார்தான் கெத்து என்று (மேசையைத் தட்டும் ஒலி) நாடு போற்றும் நல்லரசு நடத்துகின்ற வெள்ளந்தி முதல்வரே! விவசாயி வீட்டில் விளைந்த வெற்றி நாயகரே! கரிகால் சோழன் காலத்தை கண்முன் நிறுத்திய கழனிகளின் காவலரே! ஏப்ரல் மாத இடைவேளை கடந்து, மே தினத்தை இலை வேளையாக்க ஊண், உறக்கம் மறந்து உழைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) உழவர் வீட்டில் உதித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 பிப்ரவரி 27]

ஈடில்லா தொண்டிற்கு இடமும், வலமுமாக நின்று பாராண்ட தாயின் ஆட்சி, இன்னும் நூறாண்டு தொடரவே, இராமனுக்கு லெட்சுமணனாய், உறுதுணையாய் உழைக்கின்ற பாண்டிய நாடு தந்த எங்கள் செப்பு கலக்காத சொக்கத் தங்கம், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அம்மா அவர்கள் அமர்த்திய ஆசனத்தில் வீற்றிருந்து, புனிதம் மிக்க பேரவையை நெறிபிறழாது நடத்தி, ஜனநாயகத்தின் மாண்பு காத்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும், அரசுக்கு இலக்கணமாய், ஆற்றலின் பிறப்பிடமாய் கழக ஆட்சிக்கு அச்சாணியாகத் தொண்டு செய்துவரும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியானது செல்லியம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் விவகார எல்லையில் அமைந்துள்ளது. புதிதாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஆரம்பிக்க வேண்டுமெனில், குறைந்தது 2,000 ஹெக்டேர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பும், குறைந்தபட்சம் 60 விழுக்காடு கடன்பெறத் தகுதியுள்ள உறுப்பினர்களும் இருக்க வேண்டும் என்பது அரசின் நிபந்தனை ஆகும். இராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் பயிரிடப்படக்கூடிய நிலப்பரப்பு 690.468 ஹெக்டேர் மட்டுமே உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.*

திரு. ஆர்.எம். சின்னதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். வீரத்தின் விளை நிலமாம்; மாணவர்களின் காவல் தெய்வமாம்; விவசாயிகளின் தீர்க்கதரிசனமாம்; கொங்கு நாட்டுத் தங்கமாய்; சிலுவம்பாளையம் கொடுத்த சொக்கத் தங்கமாய்; (மேசையைத் தட்டும் ஒலி)*

ஏழைகளின் மாணிக்கமாய் விளங்கும், குடிமராமத்து நாயகர்; காவேரியின் காப்பாளர்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் நிரந்தர மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், தமிழகத்தில் தொடர்ந்து நான்காண்டுக் காலம் சிறப்பாக ஆட்சி நடத்தியிருக்கிறார். அதன்மூலம் இனிமேல் இவரால்தான் ஆள முடியும்; தமிழ்நாட்டை முதலமைச்சர் எடப்பாடியார்தான் ஆள வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கேற்ப முத்தான திட்டங்களைக் கொடுத்திருக்கிறார், அண்ணன் அவர்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துத் தொகுதி மக்களும், அனைத்துத் தரப்பு மக்களும் "இனிமேல் இவரால்தான் தமிழ்நாட்டைக் காப்பாற்ற முடியும், ஆளமுடியும்" என்று நேற்றே எழுதி வைத்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சருக்கு உற்ற துணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

ஆத்தூர் தொகுதி, இராமநாயக்கன்பாளையம் ஊராட்சி என்பது பெரிய ஊராட்சியாகும். இந்த ஊராட்சியில் 13,000 பேர் வாழ்ந்து வருகின்றனர்; 9,000 வாக்காளர்கள் உள்ளனர் இந்தக் கிராமம் 15 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்டது. இக்கிராமம் இரண்டு வருவாய்க் கிராமங்களாக உள்ளது. இந்தக் கிராமத்தில் 4,000 ஏக்கர் விளை நிலங்கள் உள்ளன; அதில் 4,500 குடும்பத்தினர் விவசாயம் செய்து வருகின்றனர். இந்தக் கிராமத்திற்கென்று தனியாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இல்லை. விவசாயிகள் அனைவரும் சுமார் 7, 8 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள செல்லிமலைக்குச் சென்று, விவசாய பயிர்க் கடன், நகைக் கடன், இடுபொருட்கள் ஆகியவற்றை வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதனால், விவசாயிகளுக்குக் கால விரயம் ஏற்பட்டு, விவசாயப் பணியும் தடைபடுகிறது. ஆகவே, பொது மக்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, புதிதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.